*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீடு (திருத்தச்) சட்டம்*

---

*(1999, ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, யூலை மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்*** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 6.50* *தபாற் செலவு : ரூபா 3.50*

[*1999 ஆம் ஆண்டின் யூலை மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.–ஒ.65/98.*

## 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–*

**1.** *இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

**2.** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு,* *1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் பின்னுறும் ஏற்பாடுகளுக்கமைய" என்றும் சொற்களில் தொடங்கி அவ்வுட்பிரிவு முடியும் வரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுக:-*

*"(3) இச்சட்டத்தின் பின்னுறும் ஏற்பாடுகளுக்கமைய முறையே, 1992, சனவரி 1 இல், 1993, சனவரி 1 இல், 1994, சனவரி 1 இல், 1995, சனவரி 1 இல் அத்துடன் 1996, சனவரி 1 இல் தொடங்கும் ஆண்டுகளின் ஒவ்வொரு காலாண்டுக்கும் அத்துடன் (இதனகத்துப் பின்னர் "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1997, சனவரி 1 இல் அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டினதும் ஒவ்வொரு காலாண்டுக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் என இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஒவ்வோராளுக்கும் அந்தக் காலாண்டிற்கு அல்லது அதன் பாகத்திற்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின்மீது அல்லது அதன் பாகத்தின்மீது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் கணிப்பிடப்பட்ட தேசிய பாதுகாப்பு அறவீடொன்று (இதனகத்துப் பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விதிக்கப்படுதல் வேண்டும்."*

(2) (அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "அத்தகைய பொருளின் பெறுமதி அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய பொருளின் பெறுமதி "; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "அத்தகைய உதிரிப்பாகத்தின் பெறுமதி " என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய உதிரிப்பாகத்தின் பெறுமதி; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:–

"(ஐ) ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்புக்கு அல்லது அத்தகைய ஒழுங்கமைப்பின் ஏதேனும் விசேடித்த முகவர் நிலையத்திற்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் தூதரகத்துக்கு அல்லது அத்தகைய தூதரகத்தின் தூதரகப் பணியாட் தொகுதியினரின் எவரேனும் உறுப்பினருக்கு ஏதேனும் பொருளை விற்பனை செய்வதிலிருந்து கிடைத்த வரும்படிகள் அல்லது ஏதேனும் சேவையை ஏற்பாடு செய்வது தொடர்பில் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:–

(1) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "1997 சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1998 சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக. "1997 சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1998 ஒற்றோபர் 1 ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் அத்துடன்

(2) பந்தி (எ) என்பதனை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஏ) 1998 ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும்-

(1)(அ) அவ்வாளின், இவ்வுட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் நாலரைச் சத வீதத்திற்கும் அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின்பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியில் அல்லது உற்பத்தியினின்றெழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்

சமமான தொகையொன்று.

1998 ஒற்றோபர் 1 ஆந் தேதி தொடங்கி அக்காலாண்டில் 1998 நவெம்பர் 5 ஆந் தேதியன்று முடிவடையும் காலாண்டிற்கு 1998 நவெம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்.

(ii) 1998 நவெம்பர் 6 ஆந் தேதியன்று தொடங்கி அக்காலாண்டில் 1998 நவெம்பர் 30 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு

(அ) அவ்வாளின் இவ்வுட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் ஐந்தரைச் சதவீதத்திற்கும்; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின், பொறித் தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியினின்றெழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்.

சமமான தொகையொன்று

1998 திசெம்பர் பதினைந்தாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ;

(iii) அத்தகைய ஆளினால், இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியினதும் (ii) ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக்கிணங்க செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டதான அக்காலாண்டிற்கென அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துறும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அவரால் செலுத்தப் படற்பாலதான விதிப் பனவின் தொகை; அத்துடன்

(i) 1999, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கென.

(i) (அ) அவ்வாளின், இந்த உட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத, மொத்த விற்பனைவரவின் ஐந்தரைச் சத வீதத்திற்கும் ; அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத் தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின், பொறித் தொகுதியின் அல்லது உப கரணத்தின் இறக்கு மதியில் அல்லது உற்பத்தி யினின்றெழும் அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீ தத்திற்கு

சமமான தொகையொன்று.

அக்காலாண்டி இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்,

(ii) அக்காலாண்டின் இரண்டாவது மாதத்திற்கு,

(அ) அவ்வாளின் இவ்வுட்பந்தியின் இனம் (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனைவரவின் ஐந்தரைச் சதவீதத்திற்கும் அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் ஏதேனும் மோட்டார்கார், மோட்டார் கோச்சு அல்லது லொறி அல்லாத ஏதேனும் பொறியின்,

*பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியில் அல்லது உற்பத்தியினின்றெழும் மொத்த விற்பனை வரவின் அரைச் சதவீதத்திற்கும்.*

*சமமான தொகையொன்று.*

*அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர்; அத்துடன்*

(iii) *அத்தகைய ஆளினால், இப்பந்தியின்* (i) *ஆம் உட்பந்தியினதும்* (ii) *ஆம் உட்பந்தியினதும் ஏற்பாடுகளுக் கிணங்க செலுத்தப்பட்ட தொகைகளின்கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டதான அக்காலாண்டிற்கென அக்காலாண்டின் இறுதியை உடனடுத்துறும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அவரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணைக்கான திருத்தம்.*

***4.*** *முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1) அவ்வட்டவணையின் 7 ஆம் விடயத்தில், "1997 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங் களுக்கும் பதிலாக,*

*"1997 சனவரி 1 ஆந் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ ஆனால் 1998 ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வோராண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்"என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்."*

(2) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :-

"8. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டு ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலாண்டிற்கு-

(i) (அ) 1998 ஒற்றோபர் 1 ஆந் தேதி தொடங்கி 1998 நவெம்பர் 5 ஆந் தேதி முடிவடையும் காலப்பகுதிக்கு ஏற்படுவதான பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின்மீது ................................................ 4 1/2 சதவீதம்.

(ஆ) 1998 நவெம்பர் 6 ஆந் திகதி தொடங்கி 1998 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு ஏற்படுவதான பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்படும் மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின் மீது....................................... 5 1/2 சதவீதம்

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாக விராத ஏதேனும் பொறியின், பொறித் தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத் தியினின்றும் எழுகின்றதான மொத்த விற்பனை வரவின்மீது ...........................0.5 சதவீதம்.

9. 1999, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோர் ஆண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்-

(i) இவ்விடயத்தின் (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு அல்லாத மொத்த விற்பனை வரவின்மீது............................ ................................................ 5 1/2 சதவீதம்.

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் மோட்டார்கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாகவிராத ஏதேனும் பொறியின், பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியினின்றும் எழுகின்றதான மொத்த விற்பனை வரவின்மீது ...................................... 0.5 சதவீதம்.

செல்லுபடியாக்குதல்.

**5.** சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 1998 நவெம்பர் 6 ஆந் திகதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, பொறி, பொறித்தொகுதி அல்லது உபகரணம் ஒன்றல்லாத பொருளொன்றின் இறக்குமதியாளரிடமிருந்து அப்பொருளின் பெறுமதியின் நாலரைச் சதவீதத்தை விஞ்சிய தொகையொன்றைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லு படியான முறையில் செய்யப் பட்டுள்ளதாகவும் செய்யப்பட விருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்பு தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் எதிராக அத்தகைய சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்திரவாத மளிக்கவும்படுகின்றார்.

நிலைபெயர் கால ஏற்பாடு.

**6.** இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆள், 1998 நவெம்பர் 6 ஆந் திகதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் திகதி வரையிலான காலப்பகுதி தொடர்பில், அக்காலப்பகுதிக்கு அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்தை விஞ்சிய தொகையொன்றினை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமாறு இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்டுள்ள விடத்து, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், விடயத்திற்கேற்ப இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட வாறான முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவால் அவர் அக்காலப்பகுதிக்காகச் செலுத்தத் தேவைப்படுத்தப்பட்ட தொகைக்கும் அக்காலப்பகுதிக்கு அவரால் செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தை அவர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவராயின், அவர் அப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய

வித்தியாசம் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுற்றதன் பின்னர் அத்தகைய வித்தியாசம் தவணை தவறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். என்பதுடன் அத்திகதியிலிருந்து அத்தகைய ஆள் முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத் தெல்லைக்குள் தவணை தவறிய ஒருவராக கருதப்படுதலும் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்

**7**. இச்சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1999 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.